28 DEC 1995

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்

---

*(1995 ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது***

---

**1995, ஓகத்து மாதம் 25 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.**

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 — தபாற் செலவு : ரூபா 2.55

# 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்

[1995, ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 85/93

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களையும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களையும் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையைத் தாபிப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அத்துடன் அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**இலங்கைக் கணக்கீட்டு நியமங்களைக் கடைப்பிடித்தல்.**

2. (1) (இதனகத்துப் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) பட்டயம்பெற்ற இலங்கைக் கணக்காய்வாளர் நிறுவகம், காலத்துக்குக் காலம், தொழில் முயற்சிகளின் கணக்குகளைத் தயாரிப்பதிலும் சமர்ப்பித்தலிலும் ஒரு சீரான, உயர் நியமத்தையும் பேணும் நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறானவையும் (இதனகத்துப் பின்னர், "இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவையுமான) அத்தகைய கணக்கீட்டு நியமங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கடைப்பிடிக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் கசெற்றில் வெளியிடப்பட்டும் அத்தகைய வெளியீட்டுத் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியிலிருந்தும் அதன் பின்னரும் பயனுடையனவாகவும் வருதலும் வேண்டும்.

**இலங்கைக் கணக்காய்வு நியமங்களைக் கடைப்பிடித்தல்.**

3. (1) நிறுவகமானது, காலத்துக்குக்காலம், தொழில் முயற்சிகளினது கணக்குகளின் கணக்காய்வு நடாத்தப்படுவதனை ஆளுவதற்கு அவசியமாகக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் "இலங்கைக் கணக்காய்வு நியமங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) தோதான கணக்காய்வு நியமங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கடைப்பிடிக்கப்பட்ட இலங்கைக் கணக்காய்வு நியமனங்கள் கசெற்றில் வெளியிடப்பட்டு அத்தகைய வெளியீட்டுத் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் அல்லது அதில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியிலிருந்தும் அதன் பின்னரும் பயனுடையனவாக வருதல் வேண்டும்.

**நியமங்களை வேறுபடுத்துவதற்கும் திருத்துவதற்குமான தத்துவம்.**

4. (1) நிறுவகமானது அவசியமானபோதெல்லாம், இச்சட்டத்தின்கீழ் அதனால் கடைப்பிடிக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களையும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களையும் மீளாய்வு செய்தலும், மாற்றுதலும், திருத்துதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய மீளாய்வு செய்யப்பட்ட, மாற்றப்பட்ட அல்லது திருத்தப்பட்ட நியமங்களைக் கசெற்றில் வெளியிடுவித்தலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய மீளாய்வுகள், மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் என்பன அத்தகைய மீளாய்வுகள் வெளியீட்டுத் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியிலிருந்தும் அதன் பின்னரும் பயனுடையனவாக வருதல் வேண்டும்.

(2) நிறுவகமானது, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் அல்லது அதற்குப் பிரசித்தம் கொடுப்பதற்குக் கருதப்பட்ட அத்தகைய வேறு முறையில் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களும் பற்றியும் அவற்றுக்குச் செய்யப்பட்ட மீளாய்வுகள், மாற்றங்கள், மற்றும் திருத்தங்கள் என்பன பற்றியும் பொதுமக்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

நியமங்களின் ஏற்புடைமை.

5. இச்சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகளின் கீழ் நிறுவகத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட நியமங்கள் (இதனகத்துப்பின்னர் "குறித்துரைக் கப்பட்ட தொழில் முயற்சிகள்" எனக் குறிப்பிடு செய்யப்படுபவையும், இச்சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படுபவையுமான எல்லாத் தொழில் முயற்சிகளுக்கும் ஏற்புடைத்தானதாதல் வேண்டும்.

கடைப்பிடிக் கப்பட்ட நியமங்களுக்கு இணங்கி யொழுகு வதற்கான கடமை.

6. (1) ஒவ்வொரு குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சியினதும் நிதிச் செயலாற்றுகையும் நிதி நிலைமையும் பற்றி உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை முன்வைக்கும் குறிக்கோளுடன், அத்தகைய தொழில் முயற்சியின் கணக்குகளை இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கிணங்க அதன் கணக்குகளைக் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு எல்லா அவசிய நடவடிக்கைகளை எடுத்தலும் அதன் கணக்குகளை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தலும் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சி இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

குறித்துரைக் கப்பட்ட தொழில் முயற்சிகளின் கணக்குகளின் கணக்காய்வு தகைமை பெற்ற கணக் காய்வாளர் களினாற் செய்யப்படுதல் வேண்டும்.

7. (1) குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு தொழில் முயற்சியினதும் கணக்குகள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட தொழில் செய்வதற்கான ஒரு சான்றிதழை வைத்திருக்கும் நிறுவகத்தின் உறுப்பினர்களாகவுள்ள உயர் தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ள உயர் தொழில் ரீதியில் தகைமைபெற்ற கணக்காய்வாளர்களினாற் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கிணங்க நடாத்தப்பட்டுள்ளதென்றும் கணக்குகளானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக் கப்பட்டுள்ளனவென்றும் தமது கணக்காய்வு அறிக்கையில் அத்தாட்சிப் படுத்துதல் அத்தகைய கணக்காய்வாளர்களின் கடமையாதலும் வேண்டும்.

(2) எவரேனும் தகைமையுள்ள கணக்காய்வாளர் (1) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கியொழுகுதலிலிருந்து செய்யப்பட்ட விலகல்களை அவர் தெளிவாகக் குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விலகல்களுக்கான காரணங்களைக் கொடுத்தலும் வேண்டும்.

கணக்கீட்டு நியமங்கள் குழு.

8. (1) இரண்டாம் உட்பிரிவின் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய உறுப்பினர்களைக் கொண்டுள்ள கணக்கீட்டு நியமங்கள் குழு இத்தால் தாபிக்கப்படுகின்றதென்பதுடன், அத்தகைய குழு விதப்புரைகளைச் செய்து இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் கணக்கீட்டு நியமங்களைக் கடைப்பிடிப்பதில் வேறுவகையாக நிறுவகத்திற்கு உதவுதலும் வேண்டும்.

(2) கணக்கீட்டு நியமங்கள் குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் தலைவர், அத்துடன் நிறுவகத்தின் வேறு ஐந்து உறுப்பினர்கள் ;

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் பட்டயம் பெற்ற முகாமைக் கணக்காளர்கள் நிறுவகத்தின் இலங்கைப் பிரிவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர் ;

(இ) கம்பனிகள் பதிவாளர்;

(ஈ) இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(உ) மத்திய வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென மத்திய வங்கி ஆளுநரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர் ;

(ஊ) இலங்கை வர்த்தக மன்றத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட கம்பனியொன்றின் பணிப்பாளராக அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒரு தொழில் முயற்சியில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் பரந்த அனுபவம் கொண்ட ஆளொருவராக இருக்கும் ஓர் உறுப்பினர்;

(எ) இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றச் சம்மேளனத்தால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவராகிய உறுப்பினர் ஒருவர்; இவர் கம்பனிப் பணிப்பாளரொருவராகவோ அல்லது குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சியொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டமொன்றின் பரந்த அனுபவம் பெற்ற ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் கணக்கீட்டு நியமங்கள் குழுவானது, மத்திய வங்கியின் மேற்பார்வைக் கட்டுப்பாட்டுக்குள் வரும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தொடர்பில் அல்லது வேறு நிதி நிறுவனங்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படவேண்டிய கணக்கீட்டு நியமங்கள் தொடர்பாக விதப்புரை செய்யுமாறு கோரப்படுமிடத்து அது அத்தகைய விதப்புரைகளைச் செய்யுமுன்னர் மத்திய வங்கியுடன் கலந்தாலோசித்து அதன் ஒருப்பாட்டைப் பெறுதல் வேண்டும்.

9. (1) இரண்டாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய உறுப்பினர்களைக் கொண்ட கணக்காய்வு நியமங்கள் குழுவொன்று இத்தால் தாபிக்கப்படுகின்றது என்பதுடன் அத்தகைய குழுவானது, இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கணக்காய்வு நியமங்களைக் கடைப்பிடித்தலில் விதப்புரைகளைச் செய்தல் வேண்டும் என்பதுடன் வேறு வகையில் நிறுவகத்திற்கு உதவுதலும் வேண்டும். கணக்காய்வு நியமங்கள் குழு.

(2) கணக்காய்வு நியமக் குழுவானது, அத்தகைய நிறுவகத்தின் பேரவையால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எட்டு நிறுவக உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; இவர்களுள் ஆகக் குறைந்தது நால்வராவது 8 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்

கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் குழுவின் உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் நிறுவகமானது, அவசியமானதென அது கருதுகின்றவாறும கருதும்போதும் கணக்கீட்டு நியமங்கள் குழுவில் சேவையாற்றுவதற்கு கணக்காய்வுத் துறையில் சிறப்பு அனுபவம்கொண்ட எவரேனும ஆளை ஒத்துத் தேர்ந்தெடுக்கலாம்.

**குழு உறுப்பினர்களின் சேவைக் காலம், பதவி விலகல் முதலியன.**

10. (1) கணக்கீட்டு நியமங்கள் குழுவுக்கு அல்லது கணக்காய்வு நியமக்குழுவுக்கு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் (இவர் இப்பிரிவில் "பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்" எனக் குறிப்பிடு செய்யப்படுவார்) அவரை பெயர் குறித்து நியமிக்கும் ஆளுக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதமொன்றின் மூலம் அத்தகைய குழுவிலிருந்து பதவி விலகலாம்.

(2) கணக்கீட்டு நியமங்கள் குழுவின் அல்லது கணக்காய்வு நியமங்கள் குழுவின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அத்தகைய குழுவில் நான்கு ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு சேவையாற்றுதல் வேண்டும் என்பதுடன் மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) இறக்கின்ற அல்லது அத்தகைய குழுவிலிருந்து பதவி துறக்கின்ற பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் இடத்திற்கென கணக்கீட்டு நியமங்கள் குழுவுக்கு அல்லது கணக்காய்வு நியமங்கள் குழுவுக்கு பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவர் அவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு அத்தகைய குழுவில் சேவைபுரிதல் வேண்டும்.

**கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையைத் தாபித்தல்.**

11 (1) "இலங்கைக் கணக்கீட்டு, கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை" என்று அழைக்கப்படவும் அறியப்படவும் வேண்டிய தான சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்)

(2) சபையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறிந்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் அதன் கூட்டிணைப்புப் பெயரில், வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடரவும்படலாம்.

**சபையின் அமைப்பு.**

12. (1) சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) (இதனகத்துப்பின்னர் "பதவி வழி உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மூன்று உறுப்பினர்கள், இவர்கள்

(i) கம்பனிகளின் பதிவாளராக;

(ii) உள்நாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியாக அத்துடன்,

(iii) இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை மற்றும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியாக பதவிதாங்கும் ஆட்களாக இருத்தல் வேண்டும்;

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமன உறுப்பினர்கள்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) அமைச்சரால் நியமிக்கப்படும் பவருவோர் அடங்கிய பத்து உறுப்பினர்கள் —

(i) மத்திய வங்கி ஆளுநரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மத்திய வங்கியின் ஆளுநர் ஒருவர்;

(ii) நிறுவகத்தால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆட்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட நிறுவகத்தின் மூன்று உறுப்பினர்கள்;

(iii) அருசெலவு முகாமைத்துறைக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவர் ; இவர் நிறுவனத்தின் இலங்கைப் பிரிவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பிர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும்;

(iv) இலங்கை சட்டவறிஞர் சங்கத்தால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்று சிரேஷ்ட சட்டவறிஞர்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட சிரேஷ்ட சட்டவறிஞர் ஒருவர் ;

(v) குறித்துரைக்கப்பட்ட ஒரு தொழில் முயற்சியில் சிரேஷ்ட மட்டத்தில் பரந்த முகாமைத்துவ அனுபவம் கொண்ட இரண்டு கம்பனிப் பணிப்பாளர்கள் அல்லது வேறு ஆட்கள் ; இவர்களுள் ஒருவர், இலங்கை வர்த்தக மன்றத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று பெயர்களின் குழாமொன்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவராகவும் மற்றவர் இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் சம்மேளனத்தால் சமர்ப்பிக்கபட்ட மூன்று பெயர்களின் குழாமொன்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும் ;

(vi) இலங்கை சட்டவறிஞர் சங்கத்தால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மூன்று வங்கியாளர்களைக் கொண்ட குழாமொன்றிலிருந்து தெரிவுசெய்யப்படும் ஒரு சிரேஷ்ட வங்கியாளர்; அத்துடன்

(vii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்டதான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட மூன்று ஆட்களைக் கொண்ட குழாம் ஒன்றிலிருந்து, அதன் நோக்கெல்லைக்குட்பட்ட பல்கலைக்கழகங்களில், பகுதிகளையும் கல்விப்பீடங்களையும் அத்துடன் கணக்கியல் அல்லது தொழில் முகாமைத்துவ அல்லது தொழில் நிர்வாக பட்டப்பின்படிப்பு நிறுவகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கென தெரிவுசெய்யப்பட்ட ஆளொருவர்.

(2) அமைச்சர் சபையின் நியமன அங்கத்தவர்களுள் ஒருவரை சபையின் தவிசாளராக இருப்பதற்கென நியமித்தல் வேண்டும்.

நியமன உறுப்பினர்களின் பதவிக் காலம்.

13. சபையின் நியமன உறுப்பினர் ஒவ்வொருவரும், இறப்பினால், பதவி விலகலினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி நான்கு ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிதாங்குதல் வேண்டும்.

நியமன உறுப்பினர்களை பதவியிலிருந்து அகற்றுதல்.

14. (1) அமைச்சரானவர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம், அதற்கான காரணம் எதனையும் காட்டாமல் நியமன உறுப்பினர் எவரையும் சபையிலிருந்து அகற்றலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் கட்டளை ஒன்று எந்த உறுப்பினர் தொடர்பில் வெளியிடப்படுகிறதோ அந்த உறுப்பினர், வர்த்தமானியில் அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட திகதியன்று பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

நியமன உறுப்பினர்கள் பதவி விலகல்.

15. நியமன உறுப்பினர் ஒருவர், அப்பயன்பட அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாமென்பதுடன், அத்தகைய பதவி விலகலானது, அது அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் பயனுக்கு வருதலும் வேண்டும்.

மீள நியமிக்கப்படுவதற்கான தகவுடைமை.

16. பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லாத வேறு வகையில் பதவியை வறிதாக்குகின்ற நியமன உறுப்பினர் ஒருவர், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

வெற்றிடங்களை நிரப்புதல்.

17. சபையின் நியமன உறுப்பினர் எவரும் இறப்பு, பதவி விலகல், அல்லது பதவியிலிருந்து அகற்றப்படல் காரணமாகப் பதவி வறிதாக்குகின்ற சந்தர்ப்பத்தில், அமைச்சரானவர், 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய உறுப்பினரை அடுத்து வருவதற்கு வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம். அத்தகைய உறுப்பினரின் இடத்துக்கு அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர் எவரும், அவர் எவ்வுறுப்பினரை அடுத்து வருகின்றாரோ, அவ்வுறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

சபையின் கூட்டங்கள்.

18. (1) சபையின் தவிசாளர் சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமை தாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் இல்லாதவிடத்து, சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குவதற்கென உறுப்பினர்கள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையின் கூட்டமெதற்குமான கூட்ட நடப்பெண் சபையின் ஆறு உறுப்பினர்களுக்குக் குறைவாக இருத்தலாகாது.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது, கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கையாளப்படுவது தொடர்பிலான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(4) சபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களுள் ஏதேனும் வெற்றிடம் அல்லது அதன் உறுப்பினர் எவரி னதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்ற காரணத்தினால் மட்டும் வலிதுடையதற்றதெனக் கருதப்படலாகாது.

(5) சபையின் ஏதேனும் கூட்டத்தின் தவிசாளருக்குத் தமது சொந்த வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டும்.

19. சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர் மானிக்கப்படக்கூடியவாறான முறையிலும் அத்தகைய விதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும். உறுப்பினர் களுக்கு ஊதிய மளித்தல்.

20. (1) சபையின் தவிசாளரானவர், சுகவீனம் அல்லது வேறு இய லாமை அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதிருந்தால், அமைச்ச ரானவர், அவரது இடத்தில் பதில் கடமை ஆற்றுவதற்கென வேறொரு உறுப்பினரை நியமிக்கலாம். சபையின் தவிசாளர்.

(2) அமைச்சர், அதற்கான காரணம் எதனையும் காட்டாது தவிசா ளர் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(3) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதம் மூலம் எந்நேரத்திலும் பதவியிலிருந்து விலகலாம்.

(4) இரண்டாம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தவி சாளரின் பதவிக்காலமானது, சபையில் அவரது உறுப்பாண்மைக்காலமா தல் வேண்டும்.

21. (1) சபையின் இலச்சினை சபையின் தவிசாளரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும். சபையின் இலச்சினை.

(2) சபையின் இலச்சினை, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) சபையின் இலச்சினை, சபையின் மூன்று உறுப்பினர்களின் சமூ கத்திலன்றி சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப்படலாகாது என்பதுடன், அவ்வுறுப்பினர்கள் எல்லோரும், தாம் சமூகமாய் இருந்த தற்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

22. சபையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய — சபையின் பணியாட் தொகுதி.

(அ) அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்று வதற்கும் அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்த கைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் வேண்டும் என்பதுடன், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட் டையும் பிரயோகிக்கலாம்;

(ஆ) அவ்வாறு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கும் சேவையாளர்க ளுக்கும் ஊதியமாகச் செலுத்தப்படவேண்டிய தொகைகளை நிர்ணயித்தல் வேண்டும்;

(இ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவை நியதி, நிபந்தனைகளைத் தீர்மானித்தல் வேண்டும்;

(ஈ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நன்மைக்காகச் சகாய நிதியங்களை அல்லது செயற்றிட்டங்களைத் தாபித்து, ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது செயற்றிட்டத்துக்கு உதவுதொகைகள் அளித்தலும் வேண்டும்.

சபையின் பணி.

23. குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில்முயற்சிகளினால் இலங்கை கணக்கீட்டு நியமங்களும் இலங்கை கணக்காய்வு நியமங்களும் இணங்கியொழுகப்படுவதைக் கண்காணிப்பதே சபையின் பணியாதல் வேண்டும்.

சபையின் தத்துவங்கள்.

24. சபைக்கு —

(அ) கொள்வனவு, மானியக்கொடை, இறுதிவிருப்பாவணக் கையிருப்பு ஆகியவற்றின் பயன் காரணமாக அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும், அத்துடன் அதை விற்பதற்கு, ஈடுவைப்பதற்கு, குறித்தொதுக்குவதற்கு, கொடுத்துமாற்றுவதற்கு அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கும்;

(ஆ) அதன பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்துகொள்வதற்கும்;

(இ) அதன் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்குச் சபையின் அபிப்பிராயப்படி அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது கருமங்களையும் செய்வதற்கும்

ஆன தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆண்டுக் கணக்குகளின் பிரதிபொன்று சபைக்குக் கொடுத்துதவப்படுதல்.

25. (1) இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகக் கணக்குகள் ஆக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைத் தீர்மானிப்பதற்குச் சபையை இயலச் செய்வதற்காக, அத்தகைய தொழில்முயற்சியினது ஆண்டுக் கணக்குகளின் பிரதியொன்றைச் சபைக்குச் சமர்ப்பித்தல் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு வியாபாரத் தொழில்முயற்சியினதும் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையானது அதன் கடமைகளைப் புரிதலை இயலச்செய்யும் நோக்கத்திற்காக, சபை அல்லது சபையினால் அதன்சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், குறித்துரைக்கப்பட்டதொரு தொழில் முயற்சி அதன் இயைபான கணக்குகளைச் சபைக்குச் சமர்ப்பித்த பின்னர் ஓராண்டுக்குப் பிந்தாமல் வழங்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தொழில்முயற்சியை அல்லது அதன் கணக்காய்வாளர்களை, சபைக்கு அல்லது சபையினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு, அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலத்திற்குள்ளாக அதன் கணக்குகள் தொடர்பிலான ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு கேவைப்படுத்தலாம் என்பதுடன், அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக அத்தகைய தேவைப்பாட்

டன் இணங்கியொழுகுவது, விடயத்துக்கேற்றாற் போன்று அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியின் அல்லது கணக்காய்வாளர்களின் கடமையாதலும் வேண்டும்.

(3) சபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் கடமைகளைப் புரியும் நோக்கத்துக்காக அதன் கணக்குகளைத் தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தல் தொடர்பான ஏதேனும் கருமங்கள்மீது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியின் எவரேனும் பணிப்பாளரை, அலுவலரை அல்லது கணக்காய்வாளரை ஆணையிட்டழைப்பதற்கும் விசாரிப்பதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சபை புலனாய்வுகளைச் செய்தல்.**

26. சபை அல்லது அதன் சார்பில் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ், அதன் கடமைகளைப் புரிவதற்கு அவசியமானவை அல்லது உசிதமானவையெனக் கருதக்கூடியவரான அத்தகைய புலனாய்வுகளைக் கொண்டுநடத்தலாம் அல்லது அத்தகைய விசாரணைகளை நடத்தலாமென்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காக அத்தகைய ஏதேனும் புலனாய்வில் அல்லது விசாரணையில், ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியின் எவரேனும் பணிப்பாளரை, அலுவலரை அல்லது கணக்காய்வாளரை சபையின் முன் தோன்றும்படி அல்லது அத்தகைய புலனாய்வின் அல்லது விசாரணையின் நோக்கத்துக்காகத் தேவைப்படுத்துகின்றனவான அத்தகைய பணிப்பாளரின், அலுவலரின், அல்லது கணக்காய்வாளரின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டிலுள்ள எவையேனும் அத்தகைய புத்தகங்களை அல்லது ஆவணங்களைக் காண்பிக்கும்படி எழுத்திலான அறிவித்தல்மூலம் ஆணையிட்டழைக்கலாம்.

**தவறுகள்.**

27. (1) (அ) ஆறாம் பிரிவின் அல்லது 7 ஆம் பிரிவின் அல்லது 25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அவற்றை மீறுகின்ற ஆளெவரும் :

(ஆ) 25 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது தெரிந்துகொண்டே அத்தகைய ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்குகின்றதான ஏதேனும் பொய்யான தகவலைக்கொடுத்துதவுகின்ற ஆளெவரும் ;

(இ) 25 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 26 ஆம் பிரிவின்கீழ் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது சபையின் முன்பு தோன்றுவதற்குத் தவறுகின்றவரான அல்லது சபையினால் அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் வினாவுக்கு விடையளிக்க மறுக்கின்றவரான அல்லது சபையினால் அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் பக்கத்தை அல்லது ஆவணத்தைக் காண்பிக்க மறுக்கின்றவரான அல்லது சபையினால் அல்லது சபையினால் முறையாக அதிகார

மளிக்கப்பட்ட ஓர் ஆளினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் வினாவுக்குத் தெரிந்துகொண்டே ஏதேனு பொய்யான விடையை அளிக்கின்றவரான குறித்துரை கப்பட்ட தொழில் முயற்சியொன்றின் பணிப்பாளரும் அலுவலரும் அல்லது கணக்காய்வாளரும்,

இச்சட்டத்தின்கீழ், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்ப துடன், அந்த ஆளொவ்வொருவரும், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின்பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அத்துடன் அத்தகைய தவறை உருவாக்கிய செய லானது குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியொன்றின் பங்குதாரர் கள் அல்லது அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியொன்று டன் தொடர்புள்ள ஏதேனும் நிதிசார் நிறுவனத்தை அல்லது உண்ணாட் டரசிறைத் திணைக்களத்தைத் தவறாக இட்டுச்செல்லும் நோக்கத்து டன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதுமிடத்தும், அல்லது இச்சட் டத்தின்கீழ் உரிமம்பெற்ற வர்த்தகவங்கியொன்று குற்றத்தீர்ப்பளிக்கப்படு மிடத்தும், அத்துடன் நீதிமன்றமானது தவறை உருவாக்கிய செயலா னது, அத்தகைய வங்கியின் வைப்பீட்டாளர்களைத் தவறாக இட்டுச் செல்லும் நோக்கத்துடன் செய்யப்பட்டதெனக் கருதுமிடத்தும், நீதி மன்றமானது தவறாளிக்கு, ஐந்தாண்டு காலத்தை விஞ்சாத ஒரு காலத் துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையை அளிக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழான தவறொன்று, ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படும் இடத்து தவறு புரியப்படும் ஒரு காலத்தில் அத்தகைய ஆட் கள் குழுவின் ஒரு பணிப்பாளராக, முகாமையாளராக, செயலாளராக அல்லது இவர்களையொத்த வேறு அலுவலராக உள்ளவரான ஆளொ வரும், அவர் தவறானது தமது அறிவுக்கெட்டாமலும் அவரது மறைமுக ஆதரவு இல்லாமலும் புரியப்பட்டதெனவும் அத்துடன் அவரின் பணி களின் தன்மையையும், விடயத்தின் அல்லது சூழ்நிலைகளையும் கருத் திற்கொண்டு, பிரயோகிக்கப்படவேண்டியவாறு தவறு புரிவதைத் தடுப் பதற்கான அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர் பிரயோகித் தார் எனவும் எண்பித்தாலன்றி, அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

தவறுகளை இணக்குதல்.

23. (1) சபையானது, எந்தச் சூழ்நிலைகளில் இச்சட்டத்தின் கீழான தவறு புரியப்பட்டதோ அந்தச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய தவறுக்கு விதிக்கப்படத்தக்கதான குற்றப்பணத்தின் மூன்றி லொரு பங்கை விஞ்சாதவொரு பணத்தொகைக்கு அத்தகைய தவறை இணக்கலாமென்பதுடன், இப்பிரிவின்கீழான தவறொன்றை இணக்குவ தில் சபையால் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் சபையின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியொன்று, அல்லது ஒரு கணக்காய்வாளர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ளதாகவும் அத் துடன் அத்தகைய மீறுகையானது பாரதூரமானதொரு தன்மையதா கல்லவெனவும் சபை திருப்திப்படுமிடத்து, அது —

(அ) அத்தகைய தொழில்முயற்சியை அதன் கணக்குகளை மீளக் கணக்காய்வு செய்யுமாறு அல்லது அத்தகைய கணக்குகள் வெளியிடப்பட்டிருக்குமிடத்து அவற்றை மீளவெளியிடுமாறு அல்லது தொடர்ந்துவரும் ஆண்டிற்கான அதன் கணக்குகளில் பொருத்தமான திருத்தத்தை உள்ளடக்குமாறு பணிக்கலாம்; அல்லது

(ஆ) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தொழில்முயற்சியானது பகிரங்கக் கம்பெனியொன்றாக இருக்குமிடத்து, அத்தகைய இணங்கியொழுகாமைக்கான காரணத்தையும் அத்தகைய பகிரங்கக் கம்பெனியின் கணக்குகள் இணங்கியொழுகாமையினாலான நிதிசார் விளைவையும் விளக்கி, அதன் எல்லாப் பங்குதாரர்களுக்கும் எழுத்திலான அறிவிப்பொன்றை அனுப்பும்படியும், அத்துடன் அத்தகைய தொழில்முயற்சியானது இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையொன்றில் நிரற்படுத்தப்பட்டவொரு பகிரங்கக் கம்பெனியாகவிருக்குமிடத்து, மேலதிகமாக அத்தகைய அறிவிப்புப் பற்றிய பிரதியொன்றை அத்தகைய ஆணைக்குழுவுக்கும் அத்தகைய பங்குத் தொகுதிப் பரிவர்த்தனைக்கும் அனுப்பும்படியும் பணிக்கலாம்.

29. ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொழிற்பொறுப்புமுயற்சியின் எவரேனும் கணக்காளர் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்றவிடத்து, அத்தகைய மீறுகை பற்றி அத்தகைய கணக்காளருக்கெதிராக அத்தகைய குழு தகுந்த நடவடிக்கை எடுப்பதனை இயலச் செய்யும் நோக்கத்திற்காக அத்தகைய கணக்காளர் உறுப்பினரொருவராகவிருக்கின்ற ஏதேனும் உயர்தொழில்சார் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வருதல் சபையின் கடமையாதல் வேண்டும். ஏதேனும் மீறுகை பற்றி உயர்தொழில்சார் நிறுவனத்திற்கு சபை அறிவித்தல்.

30. ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட தொழிற் பொறுப்பு முயற்சியானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கிச் செயலாற்றத் தவறுகின்றவிடத்து, அத்தகைய நிகழ்வுபற்றி — ஒழுங்குபடுத்தும் அதிகார சபைக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் சபை அறிவித்தல்.

(அ) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தொழிற்பொறுப்புமுயற்சியின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது மேற்பார்வை செய்வதற்குச் சட்டத்தினால் தத்துவமளிக்கப் பெற்ற ஏதேனும் அதிகாரசபையின்; அத்துடன்

(ஆ) அத்தகைய இணங்காமை அத்தகைய குறித்துரைக்கப்பட்ட தொழிற்பொறுப்புமுயற்சியின் வரிப் பொறுப்புக்களில் கணிசமானளவு குறைப்பை விளைவித்துள்ளதென சபை கருதினால், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின்,

கவனத்திற்குக் கொண்டுவருதல் கடமையாதல் வேண்டும்.

31. (1) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் காலத்திற்குக் காலம் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையினதானதும் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு தொழில்முயற்சியினதும் முன்னைய ஆண்டுக்கான ஐந்தொகையில் காட்டப்பட்ட கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் இறை.

வாறாக பங்குடைமையாளர்களின் ஒப்புரவின் நூற்றுவீதம் அல்லது அத்தகைய தொழில் முயற்சியின் முந்திய ஆண்டுக்கான இலாப நஷ்டக் கணக்கில் கப்பாற்றப்பட்டவாறான வரிக்குப் பின்னரான அதன் இலாபங்களின் ஒரு நூற்றுவீதம், ஆகிய இவற்றுள் எது கூடியதோ அந்த நூற்றுவீதத்தைக் கொண்டதுமான இறை ஒன்று அத்தகைய பொறுப்பு முயற்சியினால் விதிக்கப்பட்டு அறவிடப்பட்டு செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், கசெற்றில் அது வெளியிடப்படும் திகதியன்று அல்லது அதிற் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன் அது வெளியிடப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அங்கிகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதலும் வேண்டும். அவ்வாறு அங்கிகரிக்கப்படாத கட்டளை எதுவும் அதன் கீழ் ஏலவே செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாந்தன்மைக்குப் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும். கட்டளை ஒன்றானது அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*சபையின் நிதியம்.*

32. (1) சபையானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். சபையின் நிதியத்தில் —

(அ) சபையின் பயன்பாட்டிற்காகப் பாராளுமன்றத்தினால் காலத்திற்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) பிரிவு 31 இன் கீழ் விதிக்கப்பட்ட இறையின் வரும்படிகளாக சபையினால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் சபையால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும், வரவு வைக்கப்படல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழான, அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் கீழான சபையின் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் என்பனவற்றை பிரயோகிக்கையிலும், புரிகையிலும், நிறைவேற்றுகையிலும் அதனால் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.*

33. (1) சபையின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும்.

(2) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் சபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

34. சபையானது ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் ஆண்டின் போதான அதன் செயற்பாடுகளின் அறிக்கை ஒன்றை வெளியிடுதல் வேண்டுமென்பதுடன் அது அங்கீகாரத்துக்கென அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல் அமைச்சர் அத்தகைய அறிக்கையை பாராளுமன்றத்தின் முன்வைக்கச் செய்வித்தல் வேண்டும்.

வருடாந்த அறிக்கை.

35. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் நல்லெண்ணத்துடன் புரியப்பட்ட அல்லது புரியப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக சபைக்கெதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புரையின்மீது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக சபையின் எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக

தொடர்ச்சி அல்லது குற்ற வழக்கு எதுவும் தொடரப்படுதலாகாது.

இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையினது பணிப்பின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன் சபையினால் அல்லது சபைக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் சபையினால் உறப்பட்ட செலவினம் எதுவும் சபையில் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது சபையால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவுகள் சபையின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்புரையின் மீது (1) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவினமானது, அத்தகைய செயலானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதினால், அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய செலவினமானது அவரால் அறவிடப்பட்டாலன்றி, சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

36. சபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும் அத்துடன் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் நோக்கத்திற்குள்ளும் அதற்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

சபையின் உறுப்பினர்களும், அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும் என்பது.

37. சபையானது, இலஞ்சச் சட்டத்தின் கருத்தினுள் ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்று எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும். — சபையானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாக இருத்தல்.

38. (1) அமைச்சரானவர், விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பாக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். — ஒழுங்கு விதிகள்.

(2) இச்சட்டத்தினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியன்று அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்கு விதியும், அது வெளியிடப்பட்டதன்பின் வசதிப்படக்கூடியவாறான விரைவில் அங்கீகாரத்துக்கென, பாராளுமன்றத்தின் முன்னர் வைக்கப்படுதல் வேண்டும். அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர், செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி எந்தத் திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதெனக் கருதப்பட வேண்டுமோ அந்தத் திகதி பற்றிய அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

39. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி — — பொருள்கோடல்.

"மத்திய வங்கி" என்பது பணச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப்பொருள்படும் ;

"கம்பனி" என்பது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் தரப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"இலங்கை வர்த்தக மன்றம்" என்பது வர்த்தக மன்றக் கட்டளைச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை வர்த்தக மன்றம் எனப்பொருள்படும் ;

"காரணிகர் கம்பனி" என்பது —

(அ) வாடிக்கையாளர் கம்பனியின் வியாபாரக் கடன்களுக்காகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற,

(ஆ) வாடிக்கையாளர் கம்பனிக்கு ஏற்படக்கூடிய வியாபாரக் கடன்களுக்கான பொறுப்பை ஏற்று இறப்பினால் ஏற்படும் ஆபத்தை வாடிக்கையாளர் கம்பனிக்கு நீக்குகின்ற,

(இ) வாடிக்கையாளர் கம்பனியின் வியாபாரக் கடன்களைப் பொறுப்பேற்று குறித்த சில சந்தர்ப்பங்களில் அவற்றின் பெறுமதியின் ஒரு பாகத்தை உடனடியாகவும் மீதியை கடன்கள் உதிர்ந்த பின்பு முற்பணமாகக் கொடுக்கின்ற,

(ஈ) பொதுவாக வாடிக்கையாளர் கம்பனியின் பண ஓட்டத்தைச் சீர்திருத்துவதற்கான ஒரு கடனையோ அல்லது பல கடன்களையோ கொள்வனவு செய்கின்ற, அல்லது

(உ) மாற்று வழியுடன் அல்லது மாற்று வழியில்லாது வாடிக்கையாளர் வியாபாரக் கடன் ஒன்றைப் பொறுப்பேற்கின்ற ஒரு கம்பனி என்று பொருளாகும்.

"நிதி முகாமைக் கம்பனி" என்பது, வாடிக்கையாளர் முன்னுரிமைகளையும் தேவைகளையும் பொறுத்து பலவகையான சொத்துக்களில் முதலீடு செய்வதில் தமது வாடிக்கையாளர் கம்பனியின் செயற்பாடுகளை முகாமை செய்கின்ற ஒரு கம்பனி என்று பொருளாகும்.

"பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம்" என்பது 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பட்டயக் கணக்காளர் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவகம் எனப்பொருள்படும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 1987 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கென உரிமமளிக்கப்பட்ட ஒரு பகிரங்கக் கம்பனி எனப்பொருள்படும் ;

"விதித்துரைக்கப்பட்டது" என்பது, அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்டது எனப்பொருள்படும்;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, முழுமையாக அல்லது பகுதியளவில் மானியமாகவோ கடனாகவோ அல்லது வேறு வகையாகவோ அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகளுடன் அல்லது மூலதனத்துடன், கம்பனிகள் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருள்படும் ;

"பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்பது 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவெனப் பொருள்படும் ;

"பங்குதாரர் ஒப்புரவு" என்பது, ஒரு பகிரங்கக் கம்பனி தொடர்பாகப் பயன்படுத்தப்படும் போது அககம்பனியினது வழங்கப்பட்டு மூலதனமும் அதன் ஒதுக்குகளும் எனப் பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

40. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அட்டவணை (பிரிவு 5)

1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட கம்பனிகள்.

காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான 1962 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கக் காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட காணிகள்.

குத்தகைத் தொழிலைக் கொண்டு நடாத்தும் கம்பனிகள்.

காரணிகர் கம்பனிகள்.

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் கம்பெனிகள்.

கூறு நம்பிக்கைப் பொறுப்புக்களைத் தொழிற்படுத்துவதற்கென 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட கம்பனிகள்.

நிதி முகாமைக் கம்பெனிகள்.

பங்குத் தொகுதி தாகர்களாக அல்லது பங்குத்தொகுதிகையாளுநராக, கைத்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ், உரிமமளிக்கப்பட்ட கம்பனிகள்.

ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையைத் தொழிற்படுத்துவதற்கென, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க. பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட கம்பனிகள்.

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு பங்குத்தொகுதி பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள்.

1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டிருந்தாலுஞ்சரி அல்லது பட்டியலிடப்படாவிட்டாலுஞ்சரி —

(அ) விதித்துரைக்கப்பட்ட வரையறையை விஞ்சுகின்ற ஒரு மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளனவும் ;

(ஆ) முன்னைய நிதியாண்டின் இறுதியில் விதித்துரைக்கப்பட்ட வரையறையை விஞ்சுகின்ற பங்குதாரர்கள் ஒப்புரவைக் கொண்டுள்ளனவும் ;

(இ) முன்னைய நிதியாண்டின் இறுதியில் விதித்துரைக்கப்பட்ட வரையறையை விஞ்சுகின்ற முழு மொத்தச் சொத்துக்களைக் கொண்டுள்ளனவும் ;

(ஈ) முன்னைய நிதியாண்டுகள் இறுதியில் விதித்துரைக்கப்பட்ட வரையறையை விஞ்சுகின்ற வங்கிகளுக்கும் வேறு நிதி நிறுவனங்களுக்குமான பொறுப்புக்களைக் கொண்டுள்ளனவும் ;

(உ) விதித்துரைக்கப்பட்ட வரையறையை விஞ்சுகின்ற பணியாட்தொகுதியைக் கொண்டுள்ளனவும்,

ஆன கம்பனிகள்.

பொருட்களின் விற்பனையில் அல்லது சேவைகளை ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டுள்ள பகிரங்கக் கூட்டுத்தாபனம்.

மேலே குறிப்பிடப்பட்ட வகுதிகளுள் ஏதேனும் ஒன்றில் ஏதேனும் ஒன்று வருகின்ற, ஒரு தொகுதி கம்பனிகள் இவ்வட்டவணையின் நோக்கங்களுக்காக "ஒரு தொகுதி கம்பனிகள்" என்பது ஒரு கொளிக் கம்பனியும் அதன் துணை நிலைக் கம்பனிகளும் எனப் பொருள்படும் என்பதுடன், அவற்றின் கணக்குகள் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 147 ஆம் பிரிவின் கீழ் திரட்டப்படுதலும் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387' (வெளிநாட்டு) ரூபா 1,849' ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.